விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 331 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 29 புதன்கிழமை (15.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ஷக்களே காரணம்

## உயர்நீதிமன்றம் அறிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் நெருக்கடி நிலையை ஏற்படுத்தியதன் ஊடாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் நிதியமைச்சர்களான மகிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ உள்ளிட்டோர் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு அவர்கள் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

### 2024 வரவு செலவுத் திட்டம்

## இலங்கை அரசியலை மாற்றியமைக்கும்

### ஊடகப் பிரதானிகளிடம் ஜனாதிபதி



(கொழும்பு) 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியலை மாற்றியமைக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

*(04ஆம் பக்கம் பார்க்க)*

## மல்லாகத்தில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மல்லாகத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த நாகரத்தினம் ஜெககுருதாஸ் (வயது-76)

15

## மோ.சைக்கிள் விபத்து; இளைஞன் மரணம்

### யாழ்.நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர்

15

### கை, கால் துண்டிக்கப்பட்ட நிலையில்

## வவுனியாவில் இளம் பெண் சடலமாக மீட்பு

(வவுனியா)

கை, கால் துண்டிக்கப்பட்ட நிலையில் வவுனியாவில் இளம் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா, தரணிக்குளம், குறிசுட்டகுளம் பகுதியிலிருந்து நேற்று மாலை பெண் ஒருவரின் சடலம் ஒன்று அழுகிய நிலையில்

15

## இந்தியாவுடன் பொருட்கள், சேவைகள் ஒப்பந்தம் மேற்கொள்ள நடவடிக்கை

### சபையில் வர்த்தக அமைச்சர் நளின்



(கொழும்பு)

ஏற்றுமதித்துறையை மேம்படுத்துவதற்காக சிறு தொழில் முயற்சியாளர்களை ஏற்றுமதித் துறையில் ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

அத்துடன் இந்தியா போன்ற நாடுகளுடன் தற்போது முன்னெடுக்கப்படும்

04

## யாழில் தொடர் மழை 15 குடும்பங்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் மழையால் இதுவரை 15 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று மாத்திரம் எட்டு குடும்பங்

15

### மூளைக் காய்ச்சல்

## புத்தூரில் கிராம சேவகர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மூளைக் காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணத்தில் கிராம சேவகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

15

## சர்வதேச முதலீடுகளை ஈர்ப்பதற்கு முயலுங்கள்

### புதிய இலங்கைத் தூதுவர்களிடம் பிரதமர் தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)

உலகின் ஏனைய நாடுகளுடன் இணைந்து செயற்படுவதற்கு இலங்கையிடம் உள்ள வாய்ப்புகளை வெளிப்படுத்துமாறும் முதலீடுகள் மற்றும் கூட்டு முயற்சிகளை ஈர்ப்பதற்கு புதிய

16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சேவை நலன் பாராட்டு



திருமதி
**மகேஸ்வரி கெங்காதரன்**

1. மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
   1990.03.15 - 1998.01.04
2. மு/புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயம்
   1998.01.05 - 2005.02.09
3. மு/சிவநகர் தமிழ் வித்தியாலயம்
   2005.02.10 - 2013.01.31
4. மு/மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயம்
   2013.02.01 - 2019.01.01
5. மு/கோம்பாவில் விக்னேஸ்வர வித்தியாலயம்
   2019.01.02 - 2022.04.08



திருமதி
**கேதீஸ்வரி அன்புமணி**

1. மு/புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய
   வித்தியாசாலை
   15.03.1990 - 08.02.2005
2. மு/புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயம்
   09.02.2005 - 04.02.2015
3. மு/புதுக்குடியிருப்பு விக்னேஸ்வர
   வித்தியாலயம்
   05.02.2015 - 01.05.2021


எமது கல்லூரியின் ஆரம்பக் கல்வி பாட சிரேஷ்ட ஆசிரியை திருமதி **கேதீஸ்வரி அன்புமணி** அவர்களையும் அர்ப்பணிப்பான கல்விச் சேவையை நிறைவு செய்து ஓய்வுபெற்ற திருமதி **மகேஸ்வரி கெங்காதரன்** அவர்களையும் வாழ்த்துவதுடன் அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்புற இறைவனை வேண்டுகின்றோம்.

Best Wishes!

(C-7630)

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
மு/கோம்பாவில் விக்கினேஸ்வர வித்தியாலயம்

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
12 . 10 . 1947

மறைவு
18 . 10 . 2020

## அமரர் இராஜரட்ணம் தயாநிதி

(சந்திரா ஸ்ரோர் உரிமையாளர்)

திதி: 15.11.2023

எந்தையே! எமது அன்புத் தந்தையே!
தந்தையாய், தாயாய் தட்டிக் கொடுத்து
எம்மை தரணியில் வாழ வைத்தீர்!
நல்லன பல சொல்லி நலமாய் வாழ வைத்தீர்
உயர்வான வாழ்வுக்கு உரமாய் நின்று
உவகை கொண்டீரே!
ஒரு நொடிப்பொழுதில் காலன்
வந்துங்களை கவர்ந்து சென்றானே!
நாட்கள் மாதங்களாய், ஆண்டு மூன்று
வந்ததையா! ஐயாவே! - நாம்
வாழும் வரை உன் நினைவுடனே
வாழ்வோம் தெய்வமே!

'இந்திரப் பிரஸ்தம்',
கேணியடி வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

மனைவி, பிள்ளைகள்,
ஜதிசங்கர்,
[illegible]

(17880)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த (13.11.2023)
திங்கட்கிழமை யாழ்ப்பாணம்
மேல் நீதிமன்ற நீதவான்
D.S. சூசைதாஸ்
முன்னிலையில் **அகில இலங்கை சமாதான நீதவானாக**
கடமைகளைப் பொறுப்பேற்ற

**திருமதி.**
**குணரத்தினம் ரஞ்சிதாதேவி**

அவர்களின் சேவை
சிறக்கப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

Best Wishes!

வாழ்த்துவோர் : உற்றார், உறவினர், நண்பர்கள்

(17882)

# அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் ஆசிரியை

**திருமதி.ஷோபிகா கர்சன்**

அவர்கள் 04.11.2023 அன்று
அதிபர் சேவை - III நியமனத்தைப்
பெற்றுள்ளதையிட்டு அவர்களைப்
பாராட்டி வாழ்த்துவதுடன்
மேலும் பல பதவியுயர்வுகளைப்
பெற்று சிறந்து விளங்க இறை
ஆசிகளை வேண்டுகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/கொடிகாமம்
திருநாவுக்கரசு
ஆரம்ப பாடசாலை

Best Wishes!

(C-7633)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின்
பௌதீகவியல் பாட ஆசிரியர்

**திரு.**
**சத்தியநாதன் தவசீலன்**
**B.Sc, PGDE, S.L.P.S III**

அகில இலங்கை சமாதான நீதவான்,
தவிசாளர் -விசேட மத்தியஸ்த
சபை(காணி) கிளிநொச்சி
அவர்கள் இலங்கை அதிபர்
சேவை தரம் III இல் பதவியுயர்வு
பெற்றுள்ளதையிட்டு அவரை மனதாரப்
பாராட்டுவதுடன் அவரின்
பணி மென்மேலும் சிறப்படைய
வாழ்த்துகின்றோம்.

CONGRATULATIONS!

(C-7636)

வாழ்த்துவோர் ;
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
[illegible] மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம், மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



## அமரர். அருள்நங்கை சண்முகநாதன்

(இந்துநாகரிக விரிவுரையாளர்)

இறைவனடி
27.10.2022

ஏம் பாசமிகு பெற்றோர்களே!
நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி,
மாதங்கள் ஓராண்டாய், மூவாண்டாய் விரைந்ததுவோ!
நீங்கள் எமை விட்டுப் பிரிந்து நீண்ட தூரம் சென்றீர்களோ!
எம்மை சீராட்டி, பாராட்டி எம் வாழ்வுக்கு வழிகாட்டி
எம்மை பாரோடு தவிக்கவிட்டு பாதியிலே இருவரும் போனதேனோ?
அம்மா உங்கள் அன்பு முகம் கண்டு நாம் களித்திருந்தோமே
அப்பா உங்கள் ஆசை வார்த்தை கேட்டு ஆனந்தம் கொண்டிருந்தோம்.
பாசமான நினைவுகளை எம்மிடம் விட்டு நீங்கள் சென்றீர்களே!
பார்போற்ற வாழ்ந்தீர்கள்! புகழ் பல படைத்தீர்கள்

## அமரர். மாணிக்கம் சண்முகநாதன்

(புதிய உயர் கல்லூரி நிர்வாக இயக்குநர்)

இறைவனடி
26.09.2020



எத்தனை எத்தனை பட்டதாரிகளை இம் மண்ணில் உருவாக்கினீர்கள்
"புதிய உயர் கல்லூரியிலே" புதுமைகள் பல படைத்தீர்கள்
இன்று கல்லூரி உம் பிரிவால் சோபை இழந்து கிடக்கிறதே!
கல்வி உலகில் பல புகழ் சேர்த்து வானத்து நிலவாய் – அம்மா
மாணவர் உலகில் இந்துநாகரிகத்தின் சின்னமாக இடம்பிடித்தீர்கள்
மண்ணோடு மண்ணாய் உங்கள் புகழ் உடல் மறைந்தாலும்
உங்கள் இருவரது நினைவுகள் எம் இதயத்தை விட்டு நீங்காது!
இப்பிறப்பில் மட்டுமல்ல எப்பிறப்பிலும் நாம் காண முடியாத
அன்பு நிறை தெய்வங்கள் நீங்களே! உங்கள்
கனவை நினைவாக்க நாம் துணிவோம் என்றும்...
அப்பா அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

"சண்முகநாதம்"
கட்டைப்பாலி லேன்,
ஆனைக்கோட்டை.

உங்கள் பிரிவால் கலங்கித் தவிக்கும்
பிள்ளைகள்: சந்துதன், சாத்வீகன்,
உறவுகள்.

(17873)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடனான சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் குறித்து ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுக்குத் தெளிவுபடுத்து வதற்காக இந்தக் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆசிரியர்கள் மற்றும் செய்திப் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வருட வரவு செலவுத் திட்டம் நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியலை மாற்றியமைக்கும் வரவு செலவுத் திட்டமாகும். வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் இலக்கை ஏற்கனவே தான் நெருங்கிவிட்டதாகவும், அரசியல் நோக்கின்றி அந்த இலக்கை அடைய எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தலில் ஏனைய அரசியல் கட்சிகளும் போட்டியிடும். இருப்பினும் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதே தனது முதல் கடமையாகும் எனவும் அதன் பின்னர் ஏனைய விடயங்களில் கவனம் செலுத்த முடியும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம-7)

## இறுதிப் போட்டிக்கு நுழைவது யார்?

# இந்தியா - நியூஸிலாந்து இன்று பலப்பரீட்சை



13-வது ஐ.சி.சி. உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி (50 ஓவர்) கடந்த மாதம் 5ஆம் திகதி அகமதாபாத்தில் தொடங்கியது. 10 நாடுகள் பங்கேற்ற இந்த போட்டியின் லீக் ஆட்டங்கள் பல்வேறு நகரங்களில் நடைபெற்றது.

லீக் ஆட்டங்களின் முடிவில் இந்தியா, தென் ஆப் பிரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய அணிகள் முறையே முதல் 4 இடங்களை பிடித்து அரை இறுதிக்கு முன்னேறின.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நடப்பு சம்பியன் இங்கிலாந்து, வங்காளதேசம், இலங்கை, நெதர்லாந்து, ஆகிய நாடுகள் 5 முதல் 10வது இடங்களை பிடித்து வெளியேறின.

2 நாள் ஓய்வுக்கு பிறகு அரைஇறுதி போட்டி தொடங்குகிறது. இன்று பிற்பகல் 2 மணிக்கு மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெறும் முதல் அரைஇறுதி ஆட்டத்தில் முதல் இடத்தை பிடித்த இந்தியா- நான்காம் இடத்தை பிடித்த நியூசிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. (ம-7)

## இந்தியாவுடன்...

பொருட்கள் தொடர்பான வர்த்தக ஒப்பந்தங்களை பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான ஒப்பந்தங்களாக மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதல் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏற்றுமதி துறையை மேம்படுத்துவதற்காக வரவு செலவுத் திட்டத்தின் மூலம் 50 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. முக்கிய இரண்டு மூன்று நிறுவனங்களே அரசாங்கத்திற்கான பாரிய வருமானத்தை ஈட்டிக் கொடுக்கின்றன.


அரசாங்கத்திற்கான வருமானம் 60 வீதம் என்ற வகையிலேயே அறவிடப்பட்டு வரும் நிலையில் வருமானத்தை முறையாக அறவிடும் வகையிலான யோசனைகளும் இந்த வரவு செலவு திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

சீனி மோசடி தொடர்பில் எதிர்க்கட்சியில் பலரும் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். அந்த வகையில் அரசாங்கத்தின் நிதி தொடர்பான தெரிவுக்குழுவில் அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள முடியும். உண்மையில் அவ்வாறான மோசடி இடம் பெற்றிருந்தால் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றார். (ம-7)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி செந்தூரன் ரோகினி
அவர்களின் அன்பு மாமனார்

அமரர்
**முருகேசு தங்கவடிவேல்**



அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க பாடசாலை
இருபாலை கோப்பாய்

(17883)

# புகழ் வணக்கம்




தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்
முல்லை மாவட்ட அமைப்பாளர்

தேசப்பற்றாளர்
**திரு.கணபதிப்பிள்ளை விஜயகுமார்**

அவர்களின் மறைவுக்கு எமது புகழ்வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம். இலட்சிய உறுதிமிக்க தேசப்பற்றாளனின் இழப்பானது எமது அரசியல் இயக்கத்திற்கும் தமிழ்த் தேசத்திற்கும் பேரிழப்பாகும்

தலைமைச் செயலகம்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

(17884)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால்
# அதிகரிக்கும் டெங்கு
## தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலையினால் டெங்கு தொற்றுப் பரவல் தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.**

நாட்டில் நவம்பர் மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 3 ஆயிரத்து 63 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலும், மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்திலும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், நாட்டிலுள்ள 44 சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுகள் அதி டெங்கு வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக அப்பிரிவு தெரிவித்துள்ளது.

எனவே டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களை இனங்கண்டு, அவற்றை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது. (நி-5-6)

# இந்தியப் பேச்சாளரின் சிறப்புரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் "நல்லதோர் குடும்பம்" எனும் தலைப்பின் கீழ் இந்திய பேச்சாளர் மோகன சுந்தரத்தின் சிறப்புரையானது எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு யாழில் இடம்பெறவுள்ளது. (நி-5-6-104)

# மரண அறிவித்தல்
## அமரர். குமாரன் குகதாஸன்
**(உடுப்பிட்டி வடக்கு ஜே/353 கிராம அலுவலர்)**



துன்னாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட குமாரன் குகதாஸன் அவர்கள் 14.11.2023 நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரன் மற்றும் தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் இராசையா காலஞ்சென்ற தவமணி தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற கௌரி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), மதிவதனி (மல்லாவி), சரஸ்வதி (துன்னாலை), கங்காதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரேமலதாவின் அன்புக் கணவரும் ஜகதாரணனின் பாசமிகு தந்தையும் பிரபாகரன், பிரதீபன், தயாளன், லோஜினி, துசாயினி ஆகியோரின் மச்சானும் சங்கவி, கோபிநாத், சுருதிகா, அபிதா, டனுசன், ஆசாகி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று புதன்கிழமை 15.11.2023 முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புத்தூர் அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு.

(C-7631)

தகவல்
குடும்பத்தினர்.

## சீன ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவர்
# இலங்கைக்கு விஜயம்



(கொழும்பு)

சீன ஜனாதிபதியின் சிறப்பு தூதுவர் ஷென் ஹிகின் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக சீன வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இருநாள் விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் சனிக்கிழமை சீன ஜனாதிபதியின் சிறப்பு தூதுவர் ஷென் ஹிகின் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக சீன வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (நி-5-6)

# இராசிபலன்

15.11.2023
ஐப்பசி 29, புதன்கிழமை
துதியை பிற்பகல் 2.42 மணிவரை
கேட்டை பின்னிரவு 4.23 மணிவரை

சுபநேரம் -4.37-6.07 மணிவரை
இராகு காலம்-12.07-1.37 மணிவரை

சந்திராஷ்டமம்
கார்த்திகை

வளவன்





தேக நலனில் அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம்.




பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.




செயற்பாட்டில் தீவிரம் காட்டுவீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும்.




முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.




சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும்நாள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சியடைவீர்கள்.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், வியாபார விருத்தக்கு வித்திடுவீர்கள்.




உறவினர் பகை விலகும், ஆன்மீகப் பணியில் ஆர்வம் கூடும், வளர்ச்சிப்பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், போசன சுகமுண்டு.




வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், அருமையான நாள், அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.




வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறைகாட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, கௌரவமான நாள்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், மனதில் புதிய சிந்தனைகள் உருவாகும், வழிபாடு காரிய வெற்றி தரும், தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள்.




கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் நலனில் கவனம்தேவை.




எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள்.

**புத்திசாலி ஒவ்வொரு நாளையும் நல்ல நாளாக ஆக்கிக் கொள்வான்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிளி. மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற குறிகாட்டி போட்டியின் விருது வழங்கல்

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றுக்கு இடையில் நடத்தப்பட்ட பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகளின் மதிப்பீட்டிற்கான (2022) விருது வழங்கல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.**



கிளிநொச்சி மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றுக்கிடையிலான பிரதான செயலாற்றுகை மற்றும் குறிகாட்டிகளின் மதிப்பீடு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்றது.

இதன்போதே குறித்த நிகழ்வில் 82.33 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும் பூநகரி பிரதேச செயலகம் 80.55 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. கண்டாவளை பிரதேச செயலகம் 77.00 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் கரைச்சி பிரதேச செயலகம் 74.83 புள்ளிகளைப் பெற்று நான்காமிடத்தையும் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் 68.75 புள்ளிகளைப் பெற்று ஐந்தாமிடத்தையும் பெற்றுக் கொண்டமைக்காக சான்றிதழ்கள்வழங்கி கௌரவிக்கப்பட்டன.

இந்நிகழ்வில்முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள பணிப்பாளர் பி.சுனில்ஜெயசேகர, சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் நாயகம் பற்குணம், கிளிநொச்சி மாவட்ட கணக்காய்வு அத்தியட்சகர் கே.கோடீஸ்வரன், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் சி.கஜேந்திரன், மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) இ.நளாயினி, திட்டமிடல் பணிப்பாளர் கி.ஸ்ரீபாஸ்கரன், மாவட்ட செயலக பிரதம உள்ளகக் கணக்காளர் குமுதினி நிறஞ்சன், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் செல்வராஜ், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் பதவி நிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக கிளைத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-5-6)

# உடுவில் பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் உடுவில் பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் பண்பாட்டு பெருவிழா நாளை 16 ஆம் திகதி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு உடுவில் பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான த.முகுந்தன் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி.லாகினி நிருபராஷ் மற்றும் கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக நடனத்துறை தலைவர் செல்வி மைதிலி அருளையா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-5-6)

# 785/1 வழித்தடல் பேருந்து சேவை

## மூன்று தடவையாக சேவையில் ஈடுபடவுள்ளது

(யாழ்ப்பாணம்)

நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பமான காரைநகர் முதல் மூளாய் டச்சுவீதி ஊடாக சித்தன்கேணி - யாழ் வரையான 785/1 வழித்தடல் பேருந்து சேவையானது நேற்று முதல் தினமும் மூன்று முறை சேவையாக போக்குவரத்தில் ஈடுபடவுள்ளது.

இதன்படி தினமும் காலை பயண நேரமாக காரைநகர் துறை முகத்திலிருந்து 6.25 இற்கு புறப்படும் பேருந்து மூளாய் டச்சுறோட் வீதிக்கு 7.10 மணியளவில் வந்தடைந்து, 7.40 இற்கு சென்றடைந்து பின்னர் மீண்டும் யாழ்ப்பாண த்திலிருந்து 7.45 இற்கு ஆரம்பித்து சித்தன் கேணி டச்சு வீதிக்கு 8.45 மணியளவில் வருகை தந்து காரைநகர் துறைமுகத்தை 9.35 மணியளவில் சென்றடையும்.

இரண்டாவது சேவையானது 10 மணிக்கு புறப்பட்டு 10.35 மணிக்கு டச்சு வீதிக்கு வருகைதந்து 11.20இற்கு யாழைச் சென்றடையும். அங்கிருந்து 1.30இற்கு புறப்பட்டு 2.05 இற்கு டச்சு வீதியூடாக வருகை தந்து காரைநகர் துறை முகத்திற்கு 2.50 மணியளவில் சென்றடையும். மற்றும் மூன்றாவது சேவையானது காரைநகரிலிருந்து 3 மணிக்கு புறப்பட்டு 3.35 மணிக்கு டச்சு வீதி ஊடாக யாழை 4.20இற்கு சென்றடையும். அங்கிருந்து 4.45 இற்கு புறப்பட்டு 5.20 இற்கு டச்சு வீதியுடாக காரைநகர் துறைமுகத்திற்கு 6.05 இற்கு வந்து சேரும். (நி-5-6-33)

# நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழில் இலவச பரிசோதனை



(அராலி)

யாழ்.மாவட்ட நீரிழிவு கழகம் மற்றும் யாழ். போதனா மருத்துவமனை ஆகியவற்றின் ஏற்பாட்டில் உலக நீரிழிவு தினத்தினை முன்னிட்டு விழிப்புணர்வூட்டும் நடமாடும் இலவச பரிசோதனை சேவை நேற்று போதனா மருத்துவமனையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில், நீரிழிவு சிகிச்சைப்பிரிவின் நிபுணர் கலாநிதி ஆர்.ரி.அரவிந்தன் தலைமையில் நடைபெற்றது.

போதனா மருத்துவமனையின் பிரதிப்பணிப்பாளர் யமுனாந்தா கலந்து கொண்டு நடமாடும் இலவச பரிசோதனை சேவையினை ஆரம்பித்துவைத்தார்.

பதவி நிலை மருத்துவர்கள் நீரிழிவு சிகிச்சைப்பிரிவின் மருத்துவகுழாமினர்கள், மருத்துவபீட மாணவர்கள், யாழ். மாவட்ட நீரிழிவு கழகத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பலரும்கலந்து கொண்டனர். (நி-5-6-33-104)






யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி கல்வி அமைச்சின் ஆய்வு அபிவிருத்திப் பிரிவுடன் இணைந்து முதல் முதலாக தமிழ் மொழி மூலம் நடத்திய கல்வியியலில் செயல்நிலை ஆய்வு மாநாடானது நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி அரங்கில் நடைபெற்றது. (படங்கள் -சிவசாந்தன்)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 350 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 600 | 450 | 500 | 600 |
| தக்காளி | 280 | 350 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 100 | 150 | 150 |
| கோவா | 350 | 300 | 300 | 400 |
| கரட் | 350 | 450 | 450 | 500 |
| பூசணி | 120 | 80 | 100 | 120 |
| புடோல் | 250 | 220 | 200 | 200 |
| வாழைக்காய் | 600 | 180 | 180 | 250 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 250 | 280 | 300 |
| பாகற்காய் | 650 | 500 | 450 | 600 |
| வெண்டக்காய் | 240 | 200 | 200 | 250 |
| கருணைக் கிழங்கு | 160 | 90 | 120 | 160 |
| பயற்றங்காய் | 600 | 700 | 500 | 500 |
| லீக்ஸ் | 250 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 140 | 200 | 200 | 300 |
| கறிமிளகாய் | 500 | 400 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 450 | 600 | 400 | 600 |
| போஞ்சி | 450 | 400 | 450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 380 | 400 |
| கீரை - 1 பிடி | 140 | 80 | 100 | 150 |
| தேசிக்காய் | 1500 | 1300 | 1400 | 1600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 450 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 450 | 350 | -- | -- |
| முள்ளங்கி | 120 | 150 | -- | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 50 |
| ஈரப்பலா | 120 | 150 | 160 | 180 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சர்வதேச ஐக்கிய கலாம் நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கும் நிகழ்வு இந்தியாவில் ஜே.பி.ஹோட்டல், கோயம்பேடு, சென்னையில் 15.10.2023 அன்று நிகழ்ந்த வேளை யாழ்ப்பாண கோண்டாவிலைச் சேர்ந்த பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய

**கலாநிதி இராசையா குவேந்திரநாதன்**

அவர்களின் சமூக சேவையினைப் பாராட்டி அப்துல்கலாம் சமாதான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையை நாமும் பாராட்டுவதோடு அவரது சமூகசேவை மென்மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.

**உரிமையாளரும், ஊழியர்களும்**
**சீமாட்டி புடவையகம்.** (17622)
**இல.129.(122), மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.**


# ஏமாற்றிய பட்ஜெட்

## முன்னெடுக்கப்படவுள்ள போராட்டம்

### இலங்கை ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் அரசாங்க ஊழியர்களை ஏமாற்றும் வகையில் அமைந்துள்ளது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அரசாங்க ஊழியர்கள் குறைந்தபட்சம் 20 ஆயிரம் ரூபாய் சம்பளம் அதிகரிப்பை கோரியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் வரவு -செலவு திட்டத்தில் தற்போது வழங்கப்பட்டு வரும் 7800 வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை மேலும் பத்தாயிரம் ரூபாவினால் அதிகரிக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்த பரிந்துரை திருப்திகரமானது அல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரவு -செலவு திட்டம் சமர்ப்பிக்கப்படும் முன்னதாகவே பெறுமதி சேர் வரி 18% மாக அதிகரிக்கப்பட்டதாகவும் மின்சார கட்டணம் உள்ளிட்ட பல்வேறு கட்டணங்களும் ஏற்கனவே அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் உயர்வடைந்த நிலையில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு அதிகரிப்பை சம்பள அதிகரிப்பாக கருத முடியாது.

அதிபர், ஆசிரியர் சம்பளம் முரண்பாடு குறித்து இந்த வரவு -செலவு திட்டத்தில் கவனம் செலுத்தப்படவில்லை. எந்த ஒரு அரசாங்க ஊழியரும் இவ்வாறான ஒரு சம்பள அதிகரிப்பினை எதிர்பார்க்க வில்லை.

வரவு செலவுத் திட்டத்தில் கல்வித் துறை தொடர்பான எவ்வித புதிய நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

வரவு செலவு திட்டம் மீதான இரண்டாம் மூன்றாம் வாசிப்புகளின் போது அரசு ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் சரியான தீர்மானம் எடுக்க தவறினால் பாரிய தொழிற்சங்க போராட்டம் முன்னெடுக்கப்படும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (நி-5-6)


## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/சேவை மையங்களில் 31.08.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட 14.12.2023 ஆம் திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 15.12.2023 மற்றும் 16.12.2023**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை |
|---|---|
| கிளை | யா/ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை,சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யா/பல்கலைக்கழகம், யாழ்/கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம். |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறுஅறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏலவிற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்தச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இல: 021 222 2601**

(சி-7629)

PEOPLE'S BANK
Pride of the Nation


### நீரிழிவு நோயாளர்கள்

# கண்பரிசோதனை செய்வது மிகவும் அவசியம்

### தேசிய கண் நிபுணர்கள் கோரிக்கை

(கொழும்பு)

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்கள் வருடத்திற்கு ஒரு முறை தவறாமல், கண் பரிசோதனையை செய்து கொள்ளுமாறு தேசிய கண் நிபுணர்கள் பொது மக்களிடம் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையில் செய்தியாளர் சந்திப்பொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதனில், கலந்து கொண்ட, கண் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் மங்கள தனபால இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார். இதுகுறித்து மேலும் அவர் தெரிவிக்கையில்,

"நாட்டின் சனத்தொகையில் 3 மில்லியன் பேர் நீரிழிவு நோயாளிகளாக கண்டறியப்பட்டுள்ளனர்.

அவர்களில் 3 இலட்சம் பேர் பார்வையை இழந்துள்ளனர்" எனத் தெரிவித்தார். (நி-5-6)

# உலக வங்கியின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

உலக வங்கியின் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5 வருடங்களில் இலங்கையின் சுகாதாரத் துறைக்கு எவ்வாறு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் கலந்துரையாடுவதற்காகவே குறித்த குழுவினர் வருகை தந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த குழுவினர் நேற்று முன்தினம் கொழும்பு-மாளிகாவத்தை சுகாதாரப் பிரிவுக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவில் சுகாதார நிபுணர்களுடன் பொருளாதார நிபுணர்களும் உள்ளடங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை



எமது பாடசாலை ஆசிரியர்கள்
இலங்கை அதிபர் சேவை தரம் III இல்
பதவியுயர்வு பெற்றுள்ளதையிட்டு
மனதாரப் பாராட்டுவதுடன்
அவர்களின் பணி மேன்மேலும்
சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

எமது கல்லூரியின் விஞ்ஞான பாட ஆசிரியர் திரு.ஜெயராஜா ஜெயகிறிஸ்ரோ
B.Ed, B.A, Dipin Edu, D.P in Eng,M.Ed



எமது கல்லூரியின் புவியியல் பாட ஆசிரியர் திரு.சிவப்பிரகாசம் சிவகுமார் Primary Trained, B.A, Dipin Edu, MEd.

(17867)

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிச் சங்கம் யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை.


# இலங்கைக்கு தென்கிழக்கே நிலநடுக்கம்

(கொழும்பு)

இந்தியப் பெருங்கடலில் இலங்கைக்கு தென்கிழக்கே 800 கி.மீ தொலைவில் 10 கி.மீ ஆழத்தில் 6.1 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. என புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

குறித்த நிலநடுக்கத்தால் இலங்கைக்கு ஆபத்து இல்லை எனவும் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலைத் தீவில் 'இந்தியாவே வெளியேறு' முழக்கத்துடன் சீனசார்பு முகமது முய்ஜு ஜனாதிபதியாகத் தெரிவு

07

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



**நீதித்துறை**

நீதித்துறைத் தலைவராக இருப்பவர் பிரதம நீதியரசர். அவரும் அவரது நீதிபரிபாலன குழுவும் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் இஸ்லாம் மத கோட்பாடுகளையும் இஸ்லாமிய ஷரி ஆவினையும் கருத்தில் கொள்ள வேண்டும். நீதித்துறையின் எல்லா நிலைகளிலும் மஜ்லஸ், காசிகள் என்போர் பங்குபற்றுகின்றனர். இஸ்லாமிய கோட்பாடுகள் அரசியல் யாப்பு சட்டமாகவும் அன்றாட நீதிபரிபாலன ஒழுங்குமுறையாகவும் உள்ளது.

நாட்டில்194 நீதிவான் நீதிமன்றங்கள் காணப்படுகின்றன. மாலைதீவில் சிவில்துறையும் நீதித்துறையும் மேலிருந்து கீழாக கூர்கோபுர அமைப்பில் காணப்படுகின்றது. அரசின் சகல துறைகளிலும் இஸ்லாமி சரியத் சட்டம் மேலோங்கி நிற்கிறது.

**நிருவாக அலகுகள்**

மாலைதீவுகளின் 26 பவளத் தீவுகளும் இருபது நிர்வாக பவளத் தீவுகளாகவும் ஒரு நகரமாகவும் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது. மாலைதீவுகளில் பெரியதும் உலகிலே மிகப்பெரியதுமான பவளத்தீவு, ஞாவியானிபவளத் தீவு என்பதாகும்.

ஒவ்வொரு பவளத்தீவுக்கும் ஒரு தலைவர் அதிபரால் நேரடியாக நியமிக்கப்படுவதோடு அவற்றில் காணப்படும் தீவுகளுக்கு அதிபரால் நியமிக்கப்படுவர். இவர்கள் கூட்டாக பவளத்தீவுகளின் நிர்வாகத்துக்கு அதிபருக்கு பதில் கூறவேண்டியவர்களாவர்.

**தெரிவு செய்யப்பட்ட புதிய ஜனாதிபதி பற்றி.....**

1978இல் பிறந்த முகமதுமுய்ஜு, இங்கிலாந்தின் லீட்ஸ் பல்கலைக் கழகத்தில் இருந்து சிவில் இன்ஜினியரிங் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். 2012 இல் அரசியலுக்கு வந்த அவர் அமைச்சரானார். யாமீன் ஆட்சிக்கு வந்த போதும் முய்ஜு தனது அமைச்சர் பதவியை தக்கவைத்துக் கொண்டிருந்தார்.

மாலேயை சர்வதேச விமான நிலையத்துடன் இணைக்கும் 200 மில்லியன் டொலர் செலவிலான பாலம் உட்பட பல முக்கிய திட்டங்களை செயற்படுத்தினார். விமான நிலையம் மற்றொரு தீவில் அமைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டில், அவர் மாலேமேயர் தேர்தலில் வெற்றி பெற்றார். இவர் ஜனாதிபதியாக 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி பதவியில் வருவது குறிப்பிடத்தக்கது.

**மாலைதீவின் எதிர்காலம் பற்றி......**

மாலைதீவு தென்னாசிய பிராந்தியத்தில் தன்னை குடியரசாக நிலை நிறுத்தியுள்ள ஒரு நாடாகும். அதேநேரம் தனக்கென அரசியல், பொருளாதார, சமூக அம்சங்களுடன் விளங்கும் நாடாகும். அரசியல் நிலை என்கிற போது ஜனாதிபதி, பாராளுமன்றம் என்ற மஜ்லிஸ், நீதித்துறை போன்ற கட்டமைப்புடன் ஜனாதிபதித்துவ ஆட்சியைக் கொண்டு விளங்குகின்றது.

அதேபோன்று அந்நாட்டின் பொருளாதார அம்சத்தை எடுத்து கொண்டால் மீன்பிடி, சுற்றுலாத்துறை, குடிசைக் கைத்தொழில், ஏனைய உற்பத்திகள் என்ற வகையில் பொருளாதார முன்னெடுப்புகளை மேற்கொள்கிறது. மாலைதீவின் சமூகக் கட்டமைப்பை நோக்கும் போது பல்லினத்தவர்களின் கலப்பு இனமாகவும் பிறகு முழு நாடும் முஸ்லிம்களாக மாறி முஸ்லிம் சமூக அமைப்பை கொண்டு காணப்படுகின்றது.

இந்திய சாதி முறைக்கு ஒத்த, சில சமுதாய படி முறையாக்கம் இத் தீவுகளில் காணப்படுகிறது. ஆனால் அவ்வளவு இறுக்கமாக பின்பற்றப்படுவதில்லை. எனவே இந்நாடு பல உள் நாட்டு கிளர்ச்சிகள் ஏற்பட்டிருந்த போதும் தன்னை குடியரசாக நிலை நிறுத்தியிருப்பதே அதன் சிறப்பம்சமாகும்.

இந்தச் சூழலில் தான் சீனா ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்ட மக்கள் நேஷனல் காங்கிரஸ் கட்சியின் முகமது முய்ஜு வெற்றி பெற்றுள்ளார். முன்னதாக கடந்த 2013இல் இதே மக்கள் நேஷனல் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்த போது தான் சீனாவின் பல திட்டங்களுக்கு மாலைதீவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. குறிப்பாகச் சீனாவின் கனவுத் திட்டமாக அறியப்படும் ரோடு அண்ட் பெல்ட் திட்டத்திற்கும் ஒப்புதல் தரப்பட்டது.

மேலும், இந்தியா உடன் மோதல் போக்கு இருந்ததும் இந்தக் கட்சி ஆட்சியில் இருந்த சமயத்தில்தான். இந்தச் சூழலில் மீண்டும் இப்போது அதே மக்கள் நேஷனல் காங்கிரஸ் கட்சியின் முகமது முய்ஜு மாலைதீவு அதிபராகத் தேர்வாகியுள்ளார். இதனால் வரும் காலத்தில் இந்தியா மாலைதீவு உறவு மீண்டும் சிக்கலானதாக மாறுமா என்பது தெரியவில்லை.

அதிபர் தேர்தலில் முய்ஜுவின் வெற்றி மாலைதீவை சீனாவுடன் மேலும் நெருங்க வைக்கும். எவ்வாறாயினும், தற்போதைய சூழ்நிலையில் மாலைதீவுகள், இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் சமநிலையை பராமரிக்க முயற்சிக்கும் என்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் பேராசிரியரும் சர்வதேச விவகாரங்களில் நிபுணருமான பேராசிரியர் முஸ்தஃபாகமால் பாஷா பிபிசி செய்தியாளர்தில் நவாஸ் பாஷாவிடம் பேசுகையில், "இந்தத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு மாலைதீவு உடனடியாக சீனாவுடன் நெருங்காது. இந்தியாவும் அங்கு முதலீடு செய்துள்ளது. மாலைதீவால் அதை புறக்கணிக்க முடியாது," என்றார்.

"இந்தியா அவுட்" என்ற கோஷத்தை முய்ஜு எழுப்பியிருந்தார். இது பற்றிப் பேசிய பேராசிரியர் பாஷா, "மாலைதீவில் நிறுத்தப்பட்டுள்ள இந்திய வீரர்களை திருப்பி அனுப்ப அவர் விரும்புகிறார். ஆனால் இந்திய முதலீடுகள் அங்கேயே இருக்கும்.

இந்த நிலையில் அவர் இந்திய வீரர்களை திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வாய்ப்புள்ளது. ஏனெனில் இது அவருடைய தேர்தல் வாக்குறுதியும் கூட. ஆனால் மாலைதீவில் இந்தியாவின் செல்வாக்கு உடனடியாக குறையும் என்று சொல்ல முடியாது," என்று குறிப்பிட்டார்.

புதிதாக பதவி ஏற்க இருக்கும் ஜனாதிபதி பின்வருமாறு தனது கருத்தை அண்மையில் வெளியிட்டிருந்தார். மாலைதீவுகள் முழு சுதந்திரமாக இருக்க விரும்புவதாகவும் தீவு தேசத்தில் நிலைகொண்டுள்ள இந்தியப் படைகள் வெளியேற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்திய துருப்புக்களை அங்கு நிலைநிறுத்த அனுமதிப்பதன் மூலம் நாட்டின் இறையாண்மையை அவர்களிடம் சரணடைய செய்துள்ளதாகவும் சாடினார். இந்தியா மட்டுமின்றி, எந்த நாட்டின் துருப்புகளும் தங்கள் நாட்டில் நிலைகொண்டிருந்தால் எனது முடிவு இதுவாகவே இருக்கும் என்றும் அவர் விளக்கமளித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் இராணுவ பிரசன்னத்தை அகற்றுவது குறித்து ஏற்கனவே பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அத்துடன், அந்த பேச்சுவார்த்தைகளும் வெற்றி கண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேலும், இந்திய இராணுவத்தை விலக்கிவிட்டு வேறு நாடுகளுக்கு ஒருபோதும் வாய்ப்பளிக்கும் எண்ணம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(முற்றும்.)

# ஸ்ரோபெரி பயிர்ச்செய்கைக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

ஏற்றுமதிக்காக நாட்டில் ஸ்ரோபெரி பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

ஏற்றுமதிக்காக ஸ்ரோபெரிகளை பயிரிடுவதற்கு உள்நாட்டுட் முதலீட்டாளர்களால் முன்னதாக கோரப்பட்டிருந்தது.

இதற்கமைய முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை இந்த அனுமதியை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த திட்டத்திற்கு முதற்கட்ட நடவடிக்கையாக நுவரெலியாவில் விவசாய அமைச்சுக்கு சொந்தமான ஒரு ஹெக்டயர் காணியை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த திட்டம் வெற்றியடைந்தால் ஸ்ரோபெரி பயிர்ச்செய்கைக்காக 10 ஹெக்டயர் வரையான காணியை வழங்க முடியும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஸ்ரோபெரி ஏற்றுமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் இலங்கை 57 ஆவது இடத்தில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி ஸ்ரோபெரிகளை பயிரிடால் ஒரு ஹெக்டயர் காணியில் இருந்து வருடத்துக்கு ஒரு இலட்சத்துத் 17 ஆயிரத்துத் 600 அமெரிக்க டொலரை வருமானமாக ஈட்ட முடியும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பொறியியல் சிறப்பு விஞ்ஞானமாணிக் கற்கைநெறி

நீங்கள் க.பொ.த(உ/த) இல் கணித.விஞ்ஞான பிரிவில் கற்றவர்களா அப்படியாயின் மரபுவழிபல்கலைக்கழக மொன்றில் அனுமதி கிடைக்கவில்லையா? கவலையடைய வேண்டாம். உங்களுக்கு இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பொறியியல் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டம் ஒன்றைப் பெறுவதற்கான வாய்ப்பை இலங்கை திறந்த பல்கலைக் கழகம் வழங்கத் தயாராக இருக்கின்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் நிர்வகிக்கப்படும் இப் பல்கலைக்கழகமானது இலங்கையில் உள்ள ஏனைய பல்கலைக்கழகங்கள் போலவே உயர்தரச்சான்றிதழ்கள், டிப்ளோமாச் சான்றிதழ்கள், இளமாணிப்பட்டங்கள் மற்றும் பட்டமேற்பட்டங்களை வழங்குகின்ற ஓர் தேசியப் பல்கலைக்கழகமாக இருப்பதுடன் இலங்கையிலுள்ள ஏனைய தேசிய மரபுசார் பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் பட்டச் சான்றிதழ்களுக்கு சரிநிகரான தராதரத்தைக் கொண்டு இப்பட்டங்களை வழங்குகின்றமை இப் பல்கலைக்கழகத்தின் சிறப்பம்சமாகும்.

இவ் வகையில் இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது பொறியியல் சிறப்பு விஞ்ஞானமாணிப்பட்டத்தினை எந்திரவியல் தொழில்நுட்பபீடத்தின் மூலம் வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது ஆசியாவிலுள்ள திறந்த பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் சிறப்பான அம்சத்தைக் கொண்டுள்ளது. அது என்னவெனில் திறந்த தொலைக்கல்வி (Open Distance Learning) முறை மூலமான ஆய்வுகூடப்பயிற்சி நெறியுடன் கூடிய விஞ்ஞானமாணி மற்றும் பொறியியல் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டங்களை வழங்குவதாகும். இதனால் மரபுவழிப் பல்கலைக்கழக வாய்ப்பினைத் பெறத்தவறிய அல்லது உயர்கல்வி வாய்ப்பின் மூலம் பொறியியல் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டமொன்றினைப் பெறவிரும்புகின்ற ஒருவருக்கு நான்கு வருடங்களைக் கொண்ட பொறியியல் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தினையும் வழங்கி வருவதுடன் குறிப்பாக குடிசார் பொறியியல் (Civil Engineering), மின்னியல் பொறியியல் (Electrical Engineering), கணனி பொறியியல் (Computer Engineering), மின் இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் பொறியியல் (Electronics & Communication Engineering), இயந்திரவியல் பொறியியல் (Mechanical Engineering), எந்திர மின்னணுவியல் பொறியியல் (Mechatronics Engineering), புடவை மற்றும் ஆடைக்கைத்தொழில் பொறியியல் (Textile &Clothing Engineering), விவசாயப் பொறியியல் (Agricultural Engineering), ஆகிய துறைகளிலே இக்கற்கை நெறிகளை வழங்கிவருகின்றது.

திறந்த பல்கலைக்கழகமானது திறந்த என்ற சொல்லின் பொருளுக்கேற்ப 18 வயதைப் பூர்த்தி செய்த ஒருவருக்கு அவருடைய கல்வித்தகைமைக் கேற்ப நான்கு வகையான தகுதிப்பாட்டின் மூலம் இத்தகைய வாய்ப்பினை வழங்குகின்றது. முதலாவது வகைப்பாட்டில் க.பொ.த(உ/த) இல் பௌதீகவிஞ்ஞானப் பிரிவில் ஒரே அமர்வில் இணைந்த கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

இரண்டாவது வகைப்பாட்டில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் பௌதீக விஞ்ஞானப் பிரிவின் அடிப்படைச் சான்றிதழ் கற்கை நெறியினை பூர்த்தி செய்திருப்பவர்களும், இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். இவ் வடிப்படைச் சான்றிதழ் கற்கை நெறியானது இரண்டு ஆண்டுகளைக் கொண்டது. எனினும் திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் விலக்களிப்புப் பரீட்சையில் சித்தியடைபவர்கள்ஒருவருடத்தினைக்கொண்ட இவ் அடிப்படைக் கற்கை நெறியை பூர்த்தி செய்தல் போதுமானதாகும். மூன்றாவது வகைப்பாட்டில் இணைந்த கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகியவற்றில் குறைந்தது மூன்று திறமைச் சித்திகளை (C Pass) Cambridge அல்லது Edexcel இன் உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். நான்காவதான அனுமதித்தகைமையில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஏதாவது தகைமையைப் பெற்றிருத்தல் போதுமானது.

இத்துடன் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் மேற்குறித்த ஏதாவது துறைகளில் உயர்தர டிப்ளோமா அல்லது டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்கள் குறித்த பாடநெறிக்கான பாடவிலக்களிப்புடன் இக்கற்கை நெறியைத் தொடர்ந்து கற்று பொறியியல் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இலங்கை அரசினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள இத்தகைய வாய்ப்பானது க.பொ.த(உ/த) இல் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் பயின்று உயர்கல்விவாய்ப்பானது மறுக்கப்பட்ட, அல்லது வாய்ப்பினைத் தவற விட்ட மாணவர்களுக்கு இலங்கையிலுள்ள தேசிய பல்கலைக்கழகமான திறந்த பல்கலைக்கழகத்தின் மூலம் பொறியியல் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தினைப் பெறுவதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. இத்தகைய வாய்ப்பினைப் பயன்படுத்தி மாணவர்கள் தங்களது உயர் கல்வி வாய்ப்பை பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

**கி.கந்தவேள்,**
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**


## போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம் வாகன சுத்திகரிப்புச் சேவைகளிற்கான கேள்வி விலை கோரல்-2024

1. யாழ்.போதனா வைத்தியசாலை பெறுகைக்குழுவின் தலைவரினால் 2024ஆம் வருடத்திற்கான யாழ். போதனா வைத்தியசாலை வாகனங்களிற்கு சுத்திகரிப்புச் சேவையினை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பன வற்றிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கேள்வி மனுதாரர் வாகன சுத்திகரிப்புச் சேவைக்குரிய வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதியுடன், கேள்வி ஆவணக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 1000.00 ஐ யாழ். போதனா வைத்தியசாலை அலுவலகக் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும், தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்து கேள்வி விண்ணப்பங்களை 15.11.2023 முதல் 05.12.2023 வரை மு.ப. 9.00 - பி.ப 3.00 மணிவரை யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தியசாலைச் செயலாளர் அறையில் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்வி விண்ணப்பங்களின் மூலப்பிரதியினை தயார் செய்து தபாலுறையிலிட்டு முத்திரை பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் **"வாகன சுத்திகரிப்புச் சேவைகளிற்கான கேள்வி விலை கோரல் - 2024"** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

4. பூரணப்படுத்திய கேள்வி ஆவணங்களை 05.12.2023 ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ கிடைக்கச் செய்தல் வேண்டும்.

5. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே அவை அவ்விடத்திலேயே திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவருக்க அவ்வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.

6. கேள்வி ஆவணங்களை யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாக பிரிவில் இலவசமாக பார்வையிடலாம்.

7. அரசாங்க ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களுக்கு கேள்வி ஆவணங்கள் வழங்கப்படமாட்டாது.


8. குறித்த கேள்வியை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவைச் சார்ந்தது.

9. மேலதிக விபரங்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியசாலைச் செயலாளரை 021 222 7764 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(சி-7632)


# கிரிக்கெட் வழக்கில் இருந்து நீதியரசர் நிஷங்க பந்துல விலகல்



(கொழும்பு)

கிரிக்கெட் இடைக் கால கட்டுப்பாட்டுக் குழுவின் செயற்பாடுகளை இடைநிறுத்தி இடைக்காலத் தடை விவகாரம் தொடர்பான விசாரணையில் இருந்து மேன் முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன நேற்று விலகியுள்ளார்.

இந்த வழக்கு தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சரினால் தாக்கல் செய்யப்பட்ட பிரேரணை, நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் விக்கும் களுஆராச்சி ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் இந்த வழக்கை விசாரிப்பதற்கு தமது கட்சிக்காரர் ஆட்சேபனை தெரிவித்ததாக விளையாட்டுத்துறை அமைச்சர் சார்பில் ஆஜரான ஜனாதிபதியின் சட்டத்தரணி நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சர், சில அமைச்சரவை உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தம்மை நியாயமற்ற முறையில் விமர்சித்ததன் காரணமாகவே இந்த் வழக்கு விசாரணையில் இருந்து விலக தீர்மானித்ததாக தலைமை நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன தெரிவித்தார்.

அதன்படி, இந்த மனு விசாரணை வேறு நீதிபதிகள் குழாமிற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டது.(நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துவரை அவரைகளின் இளவல்: உணர்ந்துண்பவர் பயனடைவர்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். எது இருந்தும் நோய் வந்துவிட்டால் எது தேடினாலும் அதுவெதுவும் எமது உடலுள் சுவறாது. உணவில் ஊட்டச்சத்து எமக்கு மிகவும் முக்கியமானதிலொன்று. நாம் வயிறார உண்டாலும் எமது உடலுக்குத் தேவையான அனைத்து ஊட்டச்சத்துகளையும் அந்த உணவில் சேர்த்திராவிடின் சமநிலையற்றதாகிவிடும். ஊனென்றாலும் உண்பதனை உணர்ந்துண் என்பார்கள். உடலுக்கு தேவையானதை மட்டும் வேளையறிந்து அளந்து உண் என்றார்கள். இதற்கெல்லாம் உதாரணம் எம்மோடு வாழும் ஐந்தறிவு ஜீவன்கள் என்றால் ஆச்சரியமாகவே இருக்கும்.

நாயானாலும் பூனையானாலும் தமக்கு தேவையானவற்றை மட்டும் உண்ணும். மீதியை மண் போட்டு மூடிவிடும். நாயாருக்கு இந்தத் தெய்வீகக் குணம் இருப்பதனை நாம் கவனிக்க தவறிவிடுகின்றோம். மனிதனை நாயே என்று திட்டுவதற்கு முந்திக் கொள்ளும் மனித மனம் அந்த நாயிலிருக்கும் நற்குணங்களை ஆய்ந்து பார்க்க தவறிவிடுகின்றது. நன்றியை அதனது ஒவ்வொரு கலத்திலும் பொதிந்து வைத்திருக்கும் நம் வீட்டு செல்லப் பிராணியிலிருந்தாவது பல விடயங்களை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். வாரத்திலொரு நாள் நாயும் பூனையும் எதுவும் உண்ணாது நாய் அறுகம்புல்லையும் பூனை குப்பைமேனியையும் உண்டு இயன்ற வரை வாந்தியெடுத்து தமது சமிபாட்டுத் தொகுதியை சுத்தம் செய்து அன்று முழுவதும் விரதத்துடன் இருப்பதனையும் அவதானிக்கலாம். அன்றைய தினம் மாமிச உணவென்றாலும் அவை கண்டு கொள்ளாதிருப்பதனையும் அதிலிருந்து அவற்றினது உணவுக் கட்டுப்பாட்டையும் அனுபவத்திலேயே நாம் கண்டறிந்து கொள்ளலாம்.

ஊட்டச்சத்து என்பது எமது உடலுக்கு மிகமிக அவசியமானது. அள்ளித் திணிப்பதில் பலனேதுமில்லை. மாறாக அளவோடு உண்பது அதுபாட்டில் செமித்து உடலுக்கு உரமாகிவிடும். உண்டி சுருங்குவது பெண்டிற்கழகு மட்டுமல்ல தொந்தி பெருத்தவருக்கும் அழகு என்பதனை உணர மறுக்கின்றோம். அடுத்தடுத்து விழுங்கும் தின்பண்டங்களை செரிமானமடைய வைக்கும் நேரம் போதாமையால் இந்தநிலை.

ஆவரைகளில் துவரம் பருப்பும் அதிகளவில் புரதச்சத்தை கொண்டிருப்பதில் முன்னணியிலுள்ளது. அத்துடன் இது நீரிழிவு வகை II இற்கு மிகவும் சிறந்தது. இது குறிப்பாக நீரிழிவு மற்றும் கொலஸ்ரோல் அதிகமாயுள்ள நோயாளர்களுக்கு பரிந்துரைக்கப்படுகின்றது. நீரிழிவு நோயாளிகள் துவரம் பருப்பை உணவில் சேர்த்துக் கொள்வதால் பாதகமான கொலஸ்ரோலை உடலில் சேர விடாது தடுப்பதுடன் இதிலுள்ள அதிகளவிலான நார்ச்சத்து இலகுவில் உணவு செரிமானமடையவும் அதிகளவில் சீனிச்சத்து உடலில் உள்ளீர்க்கப்படாமலிருக்கவும் உதவுகின்றது.

இவ்வாறான தொற்றா நோய்களிலிருந்து விடுபடலாம் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இது உடலில்தேவையான நோயெதிர்ப்பு தன்மையை உருவாக்குவதனால் நோய்கள் ஏற்படா வண்ணம் உடலை பாதுகாக்கின்றது.

துவரம்பருப்பிலுள்ள அழற்சிக்கெதிரான எதிர்ப்பு (anti-inflammatory) சக்தி உடலில் அழற்சியெதிர்ப்பு உருவாகாமல் தடுக்கின்றது. இது குறைந்தளவு மழைவீழ்ச்சியில் வறட்சித் தன்மையை தாங்கி வளரக் கூடிய அவரையினம். இதிலுள்ள புரதச்சத்து, தேவையான காபோவைதரேற்று என்பனவற்றுக்கு மேலாக கல்சியம் மற்றும் இரும்புச் சத்தையும் சேர்த்து தரக் கூடியது.

துவரம்பருப்பில் உள்ள 343 கிலோ கலோரியுடன் புரதம் 22 கிராம், காபோவைதரேற்று 63 கிராம், கொழுப்பு 1.5 கிராம், சோடியம் 17 மி.கிராம், பொட்டாசியம் 1392 மி.கிராம், கல்சியம் 0.13 மி.கிராம், இரும்புச் சத்து 28 சதவீதம், மக்னீசியம் 45 சதவீதம், விற்றமின் பி 6.15 சதவீதம் இருக்கின்றன. இதிலுள்ள புரதச்சத்து உடலுக்கு தேவையான முக்கியமான அமினோ அமிலங்களை கொண்டிருப்பதனால் அவை உடலிலுள்ள தசைகளின் வளர்ச்சிக்கும் கலங்களின் செம்மையாக்கலுக்கும் முக்கிய பங்காற்றுகின்றன. குழந்தைகளின் உணவிலும் அறிவுரைக்கேற்ப துவரம் பருப்பினை சேர்த்துக் கொள்ளலாம்.

இதில் எமது உடற்தேவைக்கான போலிக்அமிலம் காணப்படுகின்றது. இதன் காரணமாக குழந்தை உருவாகையில் அதனது வளர்ச்சிக்கு தேவையான ஊட்டச்சத்தினை துவரம்பருப்பு வழங்கும் என ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன.


விற்றமின் பி6 அதிகமாக உள்ள உணவுப் பொருட்களில் துவரையும் ஒன்று. விற்றமின் பி வழமையான உடலிலுள் நடைபெறும் அனுசேப செயற்பாடுகளுக்கு அவசியமான ஒன்றாகும். இதில் காணப்படும் ரைபோபிளேவின் எனப்படும் அமினோஅமிலம் காபோவைதரேற்று அனுசேபத்தை நெறிப்படுத்துவதன் மூலம் உடலில் தேக்கிவைக்கப்படும் கொழுப்பின் அளவையும் மட்டுப்படுத்தும். மேலும் இதிலுள்ள மிகக்குறைந்த கிளைசீமிக் சுட்டி (low glycemic index) மற்றும் நார்ப் பொருளினளவு (dietary fibre) பசியினளவை மட்டுப்படுத்தி உடற்பருமனை குறைப்பதற்கு உதவுகின்றன.

துவரையிலுள்ள பொட்டாசியம் அயனினளவு உடலுக்கு தேவையான குறிப்பாக இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தி சீராக வைத்திருக்க உதவுகின்றது. உயரழுத்தமுடையவர்களுக்கு துவரை. இதயநோய்கள் ஏற்படுவதனை தடுக்கும் வல்லமையும் உடையது. இவையனைத்திற்கும் மேலாக உடலினுள்ள இதயத்தினது ஆரோக்கியம், எலும்புத் தொகுதியின் ஆரோக்கியம் மற்றும் உடலிலுள்ள நோயெதிர்ப்பு சக்தியின் (immune system) திறன் என்பனவற்றை பாதுகாக்கும் தன்மையும் கொண்டதாக இருக்கின்றது.

உணவினூடாக உடலைப் பாதுகாக்கும் முற்காப்புத் திட்டத்தின் கீழாக துவரையினை உணவில் சேர்த்துக் கொண்டால் அவை உடலினை சீராக சமநிலையாக வைத்திருக்கும் எனவும் அறிய முடிகின்றது.

துவரை ஏறக்குறைய 6-8 மாதப்பயிர். செடியாக வளரும் தன்மையுடையது. அவரைப்பயிர்களில் உயர்ந்து வளரும் பயிரும் இது தான். வறண்ட வலயப் பகுதிக்கென சிறப்பான பயிர். அதிகம் உள்ளீடுகள் தேவைப்படாத பயிரும் கூட. அவரைப் பயிர்களில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற காய்துளைப்பான் மற்றும் சாறு உறுஞ்சும் அரையிறகிகள் (bugs) என இப்பயிரில் சேதத்தை ஏற்படுத்த வல்லன. துவரையின் பயிர்ச்செய்கை அளவு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருக்கின்றது.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



இப்பயிரினை ஏனைய அவரைப் பயிர் கள் போல அதிக விஸ் தீரணத்தில் பயிரிட்டால் இலகுவில் மக்களுக்கு கிடைக்கத்தக்கதாக இருப்பதுடன், தனது பயன்பாட்டை அவர்கள் விரைந்து பெற்றுக்கொள்ளலாம்.

தற்போதுள்ள துவரையின் விலை மக்கள் இலகுவில் வாங்கி சமைப்பதற்கான நிலைமையை கடினமாக்கியிருக்கின்றது. இருப்பினும் உற்பத்தி அதிகரிக்கும் போது அது அனைவர் கைகளிலும் நியாயமான விலையில் கிடைக்க ஏது வாயிருக்கும்.


மாறாக அவரைப்பயிர்களில் வித்தியாசமானதாக துவரை நீண்டு வளரும் தன்மையுடையதால் குறிப்பிட்ட சில இனங்கள் ஏறக்குறைய 5 ஆண்டுகள் வாழக்கூடிய தன்மையுடையது. அதற்கு தேவையான ஊட்டச்சத்துகளை வழங்கும் போது துவரை தொடர்ந்து காய்க்கும் தன்மையுடையதாகி அதிலிருந்து வருமானத்தை இலகுவில் மேற்கொள்ளலாம். இதனது இலைகள் கால்நடைகளுக்கு உணவாக பயன்படும்.

ஆனால் பீடைப் பிரச்சினைகள் அதிகமாக உள்ள பிரதேசங்களில் பயிரினை மட்டுப்படுத்தி பீடைகள் பெருகுவதனை தடுக்கவும் வேண்டும்.

அவரைகளில் சிறப்பான குணாதிசயங்களையும் நோய்களைக் குணப்படுத்தும் ஆற்றலுமுள்ள துவரையினை பயிரிட்டும் பயன்படுத்தியும் சிறந்த பயனைப் பெற்றிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுவாகல் பாலத்தில் சிதைவுகள் சீர் செய்யுமாறு கோரிக்கை



(கண்டாவளை)

முல்லைத்தீவு ப்ரந்தன் ஏ 35 வீதியில் காணப்படும் வட்டுவாகல் பாலத்தின் பல பாகங்களில் உடைவுகள் ஏற்பட்டும் பாலத்தின் நடுவில் குழிகள் ஏற்பட்டும் உள்ளதால் அவ்வீதியில் போக்குவரத்தில் ஈடுபடுவோர் அச்சத்துடன் பயணிக்கின்றனர்.

முல்லை நகரத்தினையும் கிளிநொச்சி பரந்தன் பகுதியையும் இணைக்கும் 52 கிலோமீற்றர் தூரத்தினைக் கொண்ட ஏ-35 பிரதான வீதியில் அமைந்துள்ள வட்டுவாகல் ஆற்றுக்கான பாலமானது இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் ஆபத்தான நிலையிலேயே காணப்படுகின்றது.

குறித்த பாலத்தில் உடைவுகள் ஏற்படும்போது தற்காலிக புனரமைப்புக்கள் மாத்திரமே செய்யப்படுவதால் பாலம் அடிக்கடி சேதமடைந்து வருகின்றது.

இவ்வாறு குறித்த பாலம் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றமையினால் அவ்வீதியால் பயணிக்கும் கனரக வாகனங்களின் சாரதிகள் அச்சத்தில் பயணித்து வருகின்றனர்.

எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவ்வீதியூடாக பயணிப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-315)

# வெள்ளநீர் புகுந்ததால் 5 குடும்பங்கள் பாதிப்பு

(தருமபுரம்)

பெய்துவரும் கனமழையால் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக்கனை முசிறம்பட்டி பகுதியில் ஐந்து வீடுகளுக்குள் வெள்ளம் நிரம்பியதால் அந்த வீடுகளில் வசிக்கும் குடும்பத்தினரின் இயல்பு நிலை பாதிப்படைந்துள்ளது.

இது தொடர்பாக கிராம சேவையாளர். பிரதேச செயலாளர்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவினருக்கு அறிவித்தாக தெரிவித்தார்.

ஆனால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

எனவே தமது பகுதியில் உள்ள வெள்ளத்தை உடனடியாக அகற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (நி-5-6-316)




# மன்னாரில் கடும் மழை மக்களின் இயல்புநிலை பாதிப்பு

(மன்னார்)

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள குறைந்த காற்றழுத்த தாக்கம் காரணமாக இலங்கை முழுவதும் சீரற்ற காலநிலை நிலவி வருகின்றது. குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளதுடன் தாழ்நில கிராமங்கள் பல நீரில் மூழ்கியுள்ளன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை முதல் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளதுடன் அன்றாட செயற்பாடுகளை செய்ய முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

மக்கள் வீடுகளை விட்டு வெளியில் செல்ல முடியாத நிலை காணப்படுவதுடன் பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதோடு பல வீடுகளிலும் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

தொடர்ச்சியாக மழையுடன் கூடிய காலநிலை நீடிக்கும் பட்சத்தில் தாழ்நில கிராம மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5-6-285)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2965

கலையரசி




செல்டன்




தர்ஷிகா



நெகாரா




நிதுஷன்




சாக்ஷி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர... பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 329





"மகளே! உன் தமையனுக்கு 'இளவரசுப் பட்டம் சூட்டிய தினம் நினைவிருக்கிறதா? அன்று பட்டாபிஷேகம் நடந்த பிறகு ஆதித்த கரிகாலன் அந்தப்புரத்துக்குத் தாய்மார்களிடம் ஆசி பெறுவதற்காக வந்தான் அல்லவா? அவனுக்குப் பின்னால் நான் வந்தேன். அதே ஊமைச்சியின் ஆவி அங்கே பெண்களின் மத்தியில் நின்று கரிகாலனைக் கொடூரமாக உற்றுப் பார்த்ததைக் கண்டேன். மீண்டும் ஒரு தடவை பிரக்ஞை இழந்தேன். பிறகு யோசித்தபோது அந்தச் சம்பவத்தைக் குறித்து எனக்குச் சந்தேகம் உண்டாயிற்று. அப்படி அவள் கரிகாலனைக் கொடூரமாகப் பார்க்க வேண்டிய அவசியம் என்ன என்று ஐயுற்றேன். அதுவும் என் சித்தப்பிரமையின் தோற்றமாயிருக்கலாம் என்று எண்ணினேன். ஆனால், மகளே! இந்தத் தடவை தஞ்சைக்கு வந்த பிறகு அந்தச் சந்தேகமெல்லாம் தீர்ந்து விட்டது. ஒரு காலத்தில், அவள் உயிரோடிருந்த காலத்தில், அவள் முகத்தைப் பார்த்து அவள் மனத்திலுள்ளதைத் தெரிந்து கொள்வேன் அவள் உதடு அசைவதைப் பார்த்து அவள் சொல்ல விரும்புவது இன்னதென்று தெரிந்து கொள்வேன்! அந்தச் சக்தியை மீண்டும் நான் பெற்றுவிட்டேன், குந்தவை! நாலைந்து முறை நள்ளிரவில் அவள் என் முன்னால் தோன்றி எனக்கு எச்சரிக்கை செய்துவிட்டாள்.

"என்னைக் கொன்றாயே! அதை நான் மன்னிக்கிறேன். ஆனால் மீண்டும் பாவம் செய்யாதே! ஒருவனுக்குச் சேர வேண்டிய இராஜ்யத்தை இன்னொருவனுக்குக் கொடுக்காதே!' என்று அவள் சொல்வதைப் புரிந்து கொண்டேன். அவளுக்குப் பேசும் சக்தி வந்து வாயினால் பேசினால் எப்படி தெரிந்து கொள்வேனோ அவ்வளவு தெளிவாகத் தெரிந்துகொண்டேன். மகளே! அதை நிறைவேற்றி வைக்க எனக்கு நீ உதவி செய்ய வேண்டும். சாபமுள்ள இந்த இராஜ்யம் இந்தச் சோழ சிம்மாசனம், என் புதல்வர்களுக்கு வேண்டாம்! இதை மதுராந்தகனுக்குக் கொடுத்து விடலாம்."

குந்தவை அப்போது குறுக்கிட்டு, "அப்பா! என்ன சொல்கிறீர்கள்? நாடுநகரமெல்லாம் ஒப்புக்கொண்டு முடிந்து போன காரியத்தை இப்போது மாற்ற வேண்டிய அவசியம் என்ன? தாங்கள் மாற்றினாலும் உலகம் ஒப்புக் கொள்ளுமா?" என்று கேட்டாள்.

"உலகம் ஒப்புக் கொண்டால் என்ன, ஒப்புக்கொள்ளாவிட்டால் என்ன? தர்மம் இன்னதென்று தெரிந்து செய்ய வேண்டியது என் கடமை. நான் இந்தச் சோழ ராஜ்யத்துக்கு இளவரசனாகவும், பிறகு சக்கரவர்த்தியாகவும் முடிசூட்டிக் கொண்ட போதே என் மனம் நிம்மதியாயில்லை. என் மனச்சாட்சி என்னை உறுத்தியது. மூத்தவரின் மகன் உயிரோடிருக்கும்போது இளையவரின் மகனாகிய நான் பட்டத்துக்கு வந்ததே முறையன்று. அந்தப் பாவத்தின் பலனை இன்று நான் அனுபவிக்கிறேன். என் புதல்வர்களும் அத்தகைய பாவத்துக்கு ஏன் உள்ளாக வேண்டும்? ஆதித்தனுக்கு இந்த ராஜ்யம் வேண்டாம் அருள் மொழிக்கும் வேண்டாம். இந்த ராஜ்யத்துடன் வரும் சாபமும் வேண்டாம். நான் உயிரோடிருக்கும் போதே, மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டிவிட வேண்டும். அதன் பிறகு ஆதித்தன் காஞ்சியில் கட்டியிருக்கும் பொன் மாளிகையில் சென்று நான் மன நிம்மதியோடு வசிப்பேன்"

"அப்பா! பெரிய பிராட்டி இதற்குச் சம்மதிக்க வேண்டாமா?"

"மகளே! அதற்காகத்தான் உன் உதவியை நாடுகிறேன், எந்தக் காரணம் சொல்லியாவது என் பெரியம்மையை இங்கே வரும்படி செய். ஆகா! எவ்வளவோ தெரிந்த பரமஞானியான அந்த மூதாட்டிக்கு இந்தத் தர்ம நியாயம் ஏன் தெரிய வில்லை? என்னை, ஏன் இந்தப் பாவம் செய்யும்படி ஏவினார்? அல்லது அவருடைய சொந்தப் பிள்ளையின் பேரிலேதான் அவருக்கு என்ன கோபம்?(தொடரும்...)

## சிறுவர் அரங்கம்



### தேவதை



மாலைப்பொழுது வானத்துக்கு மஞ்சள் கலந்த இளஞ்சிவப்பு நிறத்தைக் கொடுத்து திரும்ப வாங்கிய வண்ணம் கதிரவன் மேற்குத் தொடர்ச்சி மலைக்குள் புகுந்து கொண்டிருக்கிறது.

ஆறாம் வகுப்புப் படிக்கும் கணேஷ் பள்ளியில் இருந்து வந்தவுடன் புத்தகப்பையை இறக்கி விட்டு அடுப்படியில் கண்ணாடி டப்பாவில் போட்டு வைத்திருந்த பொரிகடலையை இரண்டு வாய் அள்ளிப் போட்டுக் கொண்டு தெருவின் முற்றத்தில் விளையாடப் போய் விட்டான்.

இருள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது.

"ஏய்-கணேஷ்! விளையாடியது போதும், வந்து படிடா" என்று அம்மா கூவ, ஓடி வந்தான். "போய் கை, கால் அலம்பிட்டு மாடி மேலே போயி படி"

கணேஷ் நெடுநேரம் மும்முரமாகப் படித்துக் கொண்டிருந்தான்.

"கணேஷ் நேரமாயிடுச்சு. சாப்பிட்டு தாத்தா கூடப் போய்ப்படு. காலையில் படிக்கலாம்" என்றாள் அம்மா.

சாப்பிட்டுவிட்டு தாத்தாவுடன் படுத்தான். தூக்கம் வரவில்லை. "தாத்தா ஒரு கதை சொல்லுங்க தாத்தா" என்றான்.

பேரக்குழந்தை கேட்கிறதே என்று தாத்தாவும் கதை கூற ஆரம்பித்தார்:

ஒரு ஊர்ல ஒரு ராஜா. அவரு ஆட்சியில் மாதம் மும்மாரி பொழிந்தது. அந்த ராஜாவுக்கு மீனான்னு ஒரு ராஜகுமாரி. தேவதை போல கொள்ளை அழகு. குருகுலத்துல நல்லா பாடம் படிச்சும் வீர, தீர வித்தைகளை கத்துகிட்டும் இருந்தது. அழகும் அறிவும் இணைந்த பொக்கிஷம் என்று நாட்டு மக்கள் இளவரசியைப் புகழ்ந்தார்கள்.

மீனாவுக்காகவே வனம் போன்ற அழகுடன் அரண்மனைக்குப் பக்கத்தில் நந்தவனம் அமைத்துக் கொடுத்தார் ராஜா. மாதம் ஒரு தடவை அரண்மனையை விட்டு வெளியே வரும் மீனா, நந்தவனம் வந்து உலவிவிட்டுப் போவாள்.

அந்த ஊர் மக்கள் எல்லாம் மகிழ்ச்சியா இருக்கிற நேரத்துல அந்த ஊருக்குள்ள ஒரு வேதாளம் புகுந்தது. அந்த வேதாளம் ராத்திரி நேரம் ஊருக்குள் வந்து கல்யாணம்ஆகாத பொண்ணுங்க யாரு வந்தாலும் அடிச்சி ரத்தம் குடிச்சு கொன்னு போட்டுடும். கல்யாணம் ஆகாத பெண்களை விட்டுட்டு வேற யாரையும் தொடுறதும் இல்லை. கண்ணுக்குத் தட்டுப்படுறதும் இல்லை.

இந்த விஷயம் ராஜாவுக்குத் தெரிஞ்சி, வேதாளத்தைக் கொல்ல ஆட்களை அனுப்பினார். ஆனாலும் அதைக் கொல்ல முடியவில்லை. ராஜா குழம்பிப் போய் சோர்வாக இருந்தார்.

ராஜாவின் மனக்கவலையை மீனா அறிந்தாள். ஒரு நாள் ராஜகுமாரி ரொம்ப தைரியமாக ராத்திரி நேரம் அரண்மனைப் பின் பக்க வாசல் வழியா வேதாளத்தைப் பார்க்க கிளம்பினாள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன உறுதியும் அன்பும் நம்மிடமுள்ள பெரிய கவலைச் சுமையைப் போக்கக்கூடிய ஆற்றல் பெற்றவை. – எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## முழம் அழக்க முடியாத வெறுங்கை போல...

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நேற்று முன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி நிதியமைச்சராகவும் இருப்பதால் ரணில் விக்கிரமசிங்க அந்தப் பணியை நிறைவேற்றியுள்ளார்.

பொதுவில் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதும் அது தொடர்பில் வாதப் பிரதிவாதங்கள் மேலெழும். எதிர்க்கட்சிகள் வரவு செலவுத் திட்டத்தை சாடும். இதுவே வழமை.

எப்போதாவது வரவு செலவுத் திட்டத்தை எதிர்க்கட்சிகள் ஆதரித்ததான வரலாறுகள் இல்லை.

ஒருமுறை மட்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கொண்டு வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்கினார்.

நல்லாட்சியில் நடந்த இந்தப் புறநடையைத் தவிர வேறு எச்சந்தர்ப்பத்திலும் எதிர்க்கட்சிகள் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்ததான வரலாறு இல்லை.

அந்தவகையில் 2024ஆம்ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தையும் எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சிக்கின்றன.

ஆனாலும் நாடு வங்குரோத்து நிலையில் இருக்கும்போது, அபரிதமான எதிர்ப்பார்ப்புகளுடன் கூடிய வரவு செலவுத் திட்டத்தை எதிர்பார்க்க முடியாதென்பது நிறுதிட்டமான உண்மை.

அதேவேளை கடந்த காலங்களில் இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் தயாரித்த வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவினங்கள் மேலாடி இருந்ததன் காரணமாகவே இலங்கையின் பொருளாதாரம் படுபாதாளத்தில் விழவேண்டியதாயிற்று.

எதுவாயினும் 2024ஆம் ஆண்டுக்கான வரவு செல்வுத் திட்டத்தை ஆராய்ந்து பார்த்தால், அதில் குறித்துரைக்கக்கூடிய விடயங்கள் எதுவும் இல்லை என்பதுதான் உண்மை.

ஆனாலும் நாட்டின் சமகால சூழ்நிலையில் இவ்வாறானதொரு வரவு செலவுத் திட்டத்தை முன்வைப்பதைத் தவிர வேறு என்னதான் செய்ய முடியும்.

எதுவாயினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாசித்த வரவு செலவுத் திட்டத்தில், அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபாயை சம்பள அதிகரிப்பாக அறிவித்து நிலைமையை ஓரளவுக்குத் தணித்துக் கொண்டார் என்றே கூறவேண்டும்.

ஆம், அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே.

அதிலும் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு நிச்சயம் வழங்கப்படும் என பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

பொதுவில் நிதியமைச்சராக இருக்கக் கூடிய ஒருவர் தான் சமர்ப்பிக்கவுள்ள வரவு செலவுத் திட்டத்தை இரகசியமாக வைத்திருப்பதுதான் வழக்கம்.

ஆனால் அந்த வழமையை மீறி அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு உறுதி என்று சொல்ல வேண்டிய தேவை ஜனாதிபதிக்கு ஏற்பட்டிருந்தது.

இதற்கு மூலகாரணம் அரச தொழிற்சங்கங்கள் மாபெரும் போராட்டத்துக்கு தயாராகி இருந்தமையாகும்.

உண்மையில் அரச ஊழியர்கள் போராட்டம் நடத்துவார்களாக இருந்தால், அதன் முடிவு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நடந்ததாகவே இருக்கும்.

ஆகையால்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகநுட்பமாக அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபாயை அதிகரித்து கடுவல் நிலையைச் சுமுகமாக்கியுள்ளார் என்பதைத் தவிர வரவு செலவுத் திட்டத்தில் வேறு எதுவும் பெரிதல்ல.

# வரவு-செலவுத் திட்டத்தில் புதிதாக ஒன்றும் இல்லை

## சிறிதரன் எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு 2024 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளைக் காட்டிலும் பல முன்மொழிவுகள் கடந்த காலங்களிலும் முன்வைக்கப்பட்டன. ஆனால், எவையும் செயற்படுத்தப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

மேலும், 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் முன் மொழிவுகளை 2025 ஆம் ஆண்டும் முன் வைப்பார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"வழமையான அறிக்கையாகவே 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஜனாதிபதியால் சபையில் வாசிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு மற்றும் இந்த ஆண்டு முன் வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் இந்த முன் மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. குறிப்பிட்ட முன் மொழிவுகள் ஏதும் செயற் படுத்தப் படவில்லை.

நாட்டு மக்கள் பொருளாதார பாதிப்பால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வரவு - செலவுத் திட்டத்தில் வரி அதிகரிப்பதாலும் சொற்ப அளவில் சம்பளம் அதிகரிப்பதாலும் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. எதிர்காலத்தின் மீது நம்பிக்கை கொள்ளும் வகையில் வரவு - செலவுத் திட்டம் அமையவில்லை.

வருடாந்தம் சமர்ப்பிக்கப்படும் சம்பிரதாய பூர்வமான வரவு - செலவுத் திட்டமாகவே 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை விடுத்து இறந்த காலத்தை அடியொற்றியதாக சகல முன்மொழிவுகளும் காணப்படுகின்றன என அவர் தெரிவித்தார். (நி-5-6)

## சமாதான சுவரொட்டிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ் கழகங்கள் மாவட்டம் 306 B1 இனால் இவ்வாண்டும் சமாதான சுவரொட்டிப் போட்டி நடாத்தப்படவுள்ளது. இப்போட்டியில் 11 தொடக்கம் 13 வயதுடைய மாணவர்கள் பங்குபற்ற முடியும் எனவும் போட்டிக்கான நிபந்தனைகள் மற்றும் ஏனைய விடயங்கள் மாகாண கல்வித் திணைக்களம் ஊடாக வடமாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் ஆர்வமுடன் கலந்து கொள்ளுமாறு சமாதான சுவரொட்டி போட்டிக்கான மாவட்ட ஆளுநரின் இணைப்பாளர் லயன் B.பரீஸ்குமார் MAF தெரிவித்தார். (ம-7)

## மண்சரிவில் காணாமல் போன 4 பேரும் சடலங்களாக மீட்பு

(பலாங்கொட)

பலாங்கொட, கவரன் ஹேன பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவில் காணாமல்போன 4 பேரும் சடலங்களாக கண்டெடுக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் குறித்த மண்சரிவில் காணாமல் போயிருந்தனர்.

அனர்த்த முகாமைத்துவ பிரிவினர், இராணுவம் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து காணாமற் போனவர்களை தேடும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், மண்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் இறுதிக்கிரியைகள் அரச செலவில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வரவு - செலவுத் திட்டம் ஐக்கிய தேசியக் கட்சியுடையது

### சாடுகிறார் ராஜித

(கொழும்பு)

இந்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் ஐக்கிய தேசியக் கட்சியின் வரவு-செலவுத் திட்டம் எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் மாத்திரமே இதனை எதிர்க்க முடியும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன சாடியுள்ளார்.

வரவு-செலவுத் திட்ட உரையில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியினரால் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

"இந்த வரவு - செலவு திட்டத்தில் குறைசொல்லும்படி எந்த ஒரு விடயமும் இல்லை. ஒவ்வொரு தரப்பினருக்குமான சில ஒதுக்கீடுகளை வழங்கியுள்ளது.

ஆனால், பாராளுமன்ற வரலாற்றைப் பார்த்தால், எத்தனை முன்மொழிவுகள் கொண்டுவரப்படுகின்றன. எத்தனை முன்மொழிவுகள் நிறைவேற்றப்படுகின்றன.

அடுத்த ஆண்டு இறுதியில் இவை எந்த அளவுக்கு செயற்படுத்தப்படுகின்றன என்பதுதான் முக்கியம்.

இந்த வரவு-செலவுத் திட்டம் ஐக்கிய தேசியக் கட்சியின் வரவு செலவுத் திட்டம். இதில் ஐக்கிய தேசியக் கட்சியினால் செய்ய முடியாத பல விடயங்கள் உள்ளன" என அவர்தெரிவித்தார். (நி-5-6)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** தும்புதொழிற்சாலை முகாவில் இயக்கச்சி, இயக்கச்சி இராணுவமுகாம், Reecha, பாராம்பரிய விவசாய பண்ணை, டயலொக் கோபுரம்-இயக்கச்சி, இயக்கச்சி, கரந்தாய், கோதாண்டர்குளம், கோவில் வயல், மல்வில், முகாவில், விநாயகபுரம் பளை Wind plant ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** அரசன் அரிசி ஆலை ஆகிய இடங்க ளிலும் மின்சாரம் தடைப்படும்.

## ஹோமம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்த சுவாமி கோவில் நேற்று கந்தசஷ்டி விரதம் ஆரம்பமான நிலையில் கந்தசஷ்டி காலசத்துரு சங்கார திரிசதி ஹோமம் தொடர்ந்து 5 தினங்களும் காலை 5.30, 8.15, மதியம் 11.35 மணிக்கு ஆலயத்தில் இடம்பெறவுள்ளது. (நி-5-6)

**வடமாகாண மரநடுகை மாதம்**

**கார்த்திகை - 2023**

'ஒருமரத்தை நடவு செய்வது பிரபஞ்சத்தின் லயத்துடன் உங்களை இணைத்துக்கொள்வதற்கான எளிதான வழியாகும்.'

-அமிர் ரே (இந்திய ஆன்மிக குரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீர் பற்றாக்குறையால்

# 347 மில்லியன் சிறுவர்கள் பாதிப்பு

## ஐ.நா அதிர்ச்சித் தகவல்

(ஜெனிவா)

**காலநிலை மாற்றம் காரணமாக உலகில் வேறெங்கும் இல்லாத அளவுக்கு தெற்காசிய பிராந்தியத்தில் பாரிய தண்ணீர் பற்றாக்குறை பிரச்சினைக்கு அதிகமான சிறுவர்கள் முகங்கொடுத்து வருவதாக ஐ.நா சபை நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.**

அதன்படி, உலகின் மற்ற பிராந்தியங்களை விடவும் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, இலங்கை, நேபாளம், மாலைதீவுகள், பாகிஸ்தான் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய தெற்காசியாவில் 18 வயதுக்குட்பட்ட 347 மில்லியன் சிறுவர்கள் அதிக தண்ணீர் பற்றாக்குறையை சந்தித்துள்ளதாக ஐ.நா சிறுவர்கள் நிறுவனம் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

வெள்ளம், வறட்சி, மோசமான வானிலை மாற்றங்கள் ஏற்படுத்திய தாக்கங்கள் காரணமாக தெற்காசியாவில் மில்லியன்கணக்கான சிறுவர்கள் குடிப்பதற்கு போதுமான நீரின்றி பாதிக்கப்பட்டுள்ளதாக குறித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பரில் துபாயில் நடைபெற்ற காலநிலை மாநாட்டில் "வாழும் கிரகத்தை பாதுகாக்க" எனும் தொனிப்பொருளில் உலகத் தலைவர்களுக்கு அழைப்பு விடுப்பதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் அமைப்பு (யுனிசெப்) தெரிவித்துள்ளது.

அதன் அடிப்படையில், "பாதுகாப்பான நீரானது மனிதனின் அடிப்படை உரிமையாகும்" என தெற்காசியாவுக்கான யுனிசெப் அமைப்பின் பிராந்திய பணிப்பாளர் சஞ்சய் விஜேசேகர தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

கடந்த ஆண்டு மற்ற பிராந்தியங்களை விடவும் தெற்காசிய பிராந்தியத்தில் 45 மில்லியன் சிறுவர்கள் குடிநீர் பெற்றுக்கொள்ள முடியாமல் போராடினர்.

எனினும், தொடர்ச்சியாக நிலவும் இந்த நீர் பற்றாக்குறைக்கு தீர்வு காணும் நோக்கில் யுனிசெப் அமைப்பு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

இதன் விளைவாக, 2030 ஆம் ஆண்டுக்குள் நீர் பற்றாக்குறை பிரச்சினை பாதியாக குறைந்துவிடும் என்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், கிழக்கு ஆபிரிக்கா மற்றும் தென்னாபிரிக்காவில் 130 மில்லியன் சிறுவர்கள் மோசமான தண்ணீர் பற்றாக்குறையால் ஆபத்தை நோக்கிய நிலையில் உள்ளதாகவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5-6)

# லெபனானுக்கு எதிராக போர் தொடுப்போம் எச்சரிக்கை விடுக்கும் இஸ்ரேல்



(ஜெருசலேம்)

இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பினர் நடத்திய தாக்குதல்களில் 17 பேர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஹிஸ்புல்லா அமைப்பினர் நடத்திய தாக்குதலால் இஸ்ரேல் கடும் கோபம் அடைந்துள்ளது. எனவே லெபனானுக்கு எதிராக போர் தொடுக்கும் அபாயம் இருப்பதாக இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

மேலும் தெரியவருகையில்,

ஹமாஸ் அமைப்பிற்கும் இஸ்ரேலிய இராணுவத்திற்கும் இடையே கடும் சண்டை நடந்து வரும் நிலையில், தற்போது லெபனான் மற்றும் இஸ்ரேல் இடையிலான எல்லையிலும் மோதல்கள் அதிகரித்துள்ளன.

காசா மக்களுக்கு ஆதரவாக லெபனான் நாட்டை சேர்ந்த ஹிஸ்புல்லா அமைப்பினர் இஸ்ரேலின் வடக்கு எல்லைப் பகுதிகளை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகிறார்கள். நேற்று முன்தினம் ஒரு மணி நேரத்திற்குள் 15 ஏவுகணைகள் ஏவப்பட்டதாகவும் அவற்றில் நான்கு ஏவுகணைகளை இஸ்ரேல் இராணுவம் தாக்கி அழித்ததாகவும் கூறப்படுகிறது.

கடந்த சில நாட்களில் நடந்த மிகப்பெரிய தாக்குதல் என்று கூறப்படுகிறது. இந்நிலையில் ஹிஸ்புல்லா அமைப்பினர் நடத்திய தாக்குதல்களில் ஏழு இஸ்ரேலிய வீரர்கள் உள்ளிட்ட 17 பேர் காயமடைந்துள்ளனர்.

ஹிஸ்புல்லாவின் ஏவுகணை ஆயுதக் களஞ்சியம் ஹமாஸின் ஆயுதக் களஞ்சியமாக இருப்பதாக நம்பும் இஸ்ரேல், லெபனானுக்கு எதிராக முழுமையான போருக்கான அபாயம் இருப்பதாக எச்சரித்துள்ளது. (நி-5-6)

# பிரித்தானிய வெளியுறவுத்துறை அமைச்சராக டேவிட் கேமரூன்



(லண்டன்)

பிரித்தானிய வெளியுறவுத் துறை அமைச்சராக டேவிட் கேமரூனை பிரதமர் ரிஷி சுனக் நியமித்துள்ளார்.

பாலஸ்தீன ஆதரவு பேரணியை பொலிஸார் கையாண்ட விதம் குறித்து விமர்சித்ததால் ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து இங்கிலாந்து வெளியுறவுத்துறை அமைச்சுப் பொறுப்பில் இருந்து சுவெல்லா பிரேவர்மென் நேற்று முன்தினம் நீக்கப்பட்டார்.

இதைத்தொடர்ந்து, பிரித்தானிய அமைச்சரவையில் மேலும் ஒரு அதிரடி மாற்றத்தையும் ரிஷி சுனக் மேற்கொண்டுள்ளார்.

அதன்படி, இங்கிலாந்தின் முன்னாள் பிரதமரான டேவிட் கேமரூன் வெளியுறவுத்துறை அமைச்சராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டேவிட் கேமரூன் கடந்த 2010-2016 முதல் பிரித்தானிய பிரதமராக பதவி வகித்தார். 2016 ஆம் ஆண்டு பிரெக்சிட் பொதுவாக்கெடுப்பு தோல்வி அடைந்ததால், பிரதமர் பதவியில் இருந்து டேவிட் கேமரூன் பதவி விலகினார்.

அதன்பிறகு கிட்டத்தட்ட 6 ஆண்டுகளுக்கு பிறகு முக்கிய பொறுப்புக்கு டேவிட் கேமரூன் வந்துள்ளார். (நி-5-6)

# 3 கோடிக்கு ஏலம் போன உணவுப்பட்டியல்

(லண்டன்)

கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலில் முதல் வகுப்பு பயணிகளுக்கு வழங்கப்பட்ட இரவுநேர உணவுப் பட்டியல் 3 கோடிக்கு ஏலம் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் டைட்டானிக் கப்பல் விபத்துக்குள்ளாவதற்கு முன்பாக அந்த கப்பலில் முதல் வகுப்பு பயணிகளுக்கு வழங்கப்பட்ட இரவு நேர உணவுப்பட்டியல் ஏலமிடப்பட்டுள்ளது.

அந்த இரவுநேர உணவு பட்டியல் கார்டு 70 ஆயிரம் பவுண்ட் மதிப்பில் ஏலம் போகும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 83 ஆயிரம் பவுண்ட் (இலங்கை மதிப்பில் 3.3கோடி) அளவிற்கு ஏலம் போயுள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோ.சைக்கிள்...

உயிரிழந்துள்ளார்.

இதில் நாலாம் குறுக்குத் தெரு குரு நகரைச் சேர்ந்த நிலக்சன் (வயது-18) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 09ஆம் திகதி அன்று குறித்த இளைஞன் தனது 14 வயது நண்பர் ஒருவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள தண்ணீர்த்தாங்கி வீதியால் வேகமாகப் பயணித்துள்ளார்.

அப்பகுதியில் இருந்த வேகத் தடுப்பு அணையுடன் இடறி இடது பக்கம் இருந்த மதிலுடன் மோதி பின்னர் வலது பக்கம் இருந்த மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

தலைக்கவசம் அணியாத இருவரும் அவ்விடத்தில் படுகாயமடைந்து மயங்கிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னால் இருந்து பயணித்த சிறுவன் தற்போதும் சிகிச்சை பெற்றுவரும் நிலையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி சென்ற இளைஞர் சிகிச்சை பலனின்றி நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை உயிரிழந்தார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## புத்தூரில்...

இவர் உடுப்பிட்டி வடக்கு ஜே/353 கிராம சேவகர் பிரிவில் கடமையாற்றி வந்தவர்.

குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கு பகுதியைச் சேர்ந்த குமாரன் குகதாசன் (வயது-48) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே நேற்று உயிரிழந்துள்ளார்.

குறித்த கிராம சேவகர் தீபாவளி தினத்தன்று மயங்கி விழுந்துள்ளார். இந்நிலையில் அவர் அச்சுவேலி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

மூளைக் காய்ச்சலினாலேயே இந்த மரணம் சம்பவித்துள்ளதாக பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது. (ம-7,33,104)

## வவுனியாவில்...

கண்டெடுக்கப்பட்டுள்ளதாக ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

தரணிக்குளம் குறிசுட்டகுளத்தின் நீரேந்து பகுதியில் நீரில் மிதந்த நிலையில் காணப்பட்ட அழுகிய நிலையிலுள்ள பெண்ணின் சடலம் தொடர்பாக அப்பகுதி மக்களால் ஈச்சங்குளம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் சடலத்தை பார்வையிட்டதுடன், அதனை மீட்டனர்.

குறித்த சடலமானது இரண்டு கைகளும், ஒரு காலும் இல்லாத நிலையில் உருக்குலைந்த நிலையில் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரு கைகளும் காலும் வெட்டப்பட்டிருக்கலாம் என தடயவியல் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன், சடலமாக மீட்கப்பட்டவர் 26 வயதிற்கு உட்பட்டவராக இருக்கலாம் என கருதப்படுவதுடன், சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் உள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,250)

## மல்லாகத்தில்...

என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் கடந்த 31ஆம் திகதி கொக்குவிலில் இருந்து தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார்.

காலை 8.30 மணியளவில் மல்லாகம் சந்தியில் எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் திடீரென வலது பக்கமாக திருப்பியதனால் விபத்து ஏற்பட்டது.

இதில் படுகாயமடைந்த நிலையில் உடனடியாக தெல்லிப்பளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## பொருளாதார...

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென இரண்டு அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த மனுக்களை விசாரித்த, ஐவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாமின், பெரும்பான்மையான நீதியரசர்களின் தீர்மானத்துக்கமைய இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மனுவில், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தொழிலதிபர்களுக்கு 681 பில்லியன் ரூபாய் வரி விலக்கு அளிக்கப்பட்டதாக சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இதுவே இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணமாகும் என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி பிரச்சினை, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதில் தாமதம் மற்றும் அந்நிய செலாவணி நெருக்கடியின் போது 500 மில்லியன் அமெரிக்க டொலர் இறையாண்மைப் பத்திரங்களைத் திருப்பிச் செலுத்துதல் உள்ளிட்ட தவறான பொருளாதார நிர்வாகப் பிரச்சினைகளையும் மனுதாரர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்த மனுவை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மஹீம் மெண்டிஸ், இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சந்திர ஜயரத்ன, ஜூலியன் போலிங்,

ஜெஹான் கனகரத்ன மற்றும் ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேசனல் ஸ்ரீலங்கா ஆகியோர் தாக்கல் செய்திருந்தனர்.

இதேவேளை, மனுதாரர்களுக்கு தலா 150,000 ரூபாயை நட்டஈடாக வழங்கவேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-7)

## யாழில்...

கள் அடைமழையால்பாதிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/388 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த மூவரும், ஜே/400 கிராம சேவகர் பிரிவில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 16 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் இதுவரை 15 குடும்பங்கள்மழையால்பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/167 கிராம சேவகர் பிரிவில் ஆலயம் ஒன்றிற்கு மேலே அரசமரம் ஒன்று குடை சாய்ந்ததில் குறித்த ஆலயம் சேதமடைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7,104)


கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3540 — சீட்டிழுப்பு திகதி 14.11.2023 — ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 01 08 49 64 — E — 35295 — தேசிய லொத்தர் சபை

தன நிதானய — திகதி 2023.11.14 — சீட்டிழுப்பு இலக்கம் 1328 — T 02 19 29 34 T — Double Chance 25704

Lucky 7 — திகதி 14.11.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0124 — L7 இலக்கம் 2 7 — வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 0 3 4 9 3 9

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2023.11.14 — சீட்டிழுப்பு இலக்கம் 0607 — மீனம் 12 16 26 29 மீனம் — 55355 — 21

மெகா பவர் — திகதி 14/11/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1646 — V 20 13 21 55 69 — Double Chance 59043

மஹஜன சம்பத — திகதி 2023/11/14 — சீட்டிழுப்பு இலக்கம் 5298 — P 3 5 3 9 2 1 — தேசிய லொத்தர் சபை

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பர் பால் — திகதி 14.11.2023 — வெற்றி வாரம் 006 — வர்ணம் சிவப்பு — V 9 0 2 7 5 0 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 21,157,177.60 — DLB — தொலை பேசி: 011-2 333 546-47 — Web: www.dlb.lk

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2272 — வர்ணம் இள நீலம் — சீட்டிழுப்பு திகதி 2023.11.14 — தினம் செவ்வாய்க்கிழமை — வெற்றி இலக்கங்கள் 01 17 43 63 G — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,193,644/-

சனிதா — திகதி 2023.11.14 — வெற்றி வாரம் 4433 — வர்ணம் பச்சை — வெற்றி இலக்கங்கள் 03 18 46 48 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,828,712.00

சசிரி — வெற்றி வாரம் 402 — சீட்டிழுப்பு திகதி 2023.11.14 — ஊதா — வெற்றி இலக்கங்கள் 05 34 44 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,888,240/-

ராசி — சீட்டிழுப்பு வாரம் 3984 — வர்ணம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2023.11.14 — தினம் செவ்வாய்க்கிழமை — வெற்றி இலக்கங்கள் 02 13 29 62 — மீனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,469,472/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — N 18 43 50 60 66 — 1448 — 2023.11.14 சவ்வாய் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 464,981,314.20 — DLB

அத கோட்டிபதி ADA KOTIPATHI — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம்: 2098 — சீட்டிழுப்பு திகதி: 2023.11.14 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69,080,776/- — வெற்றி இலக்கங்கள் 30 66 73 76 Z


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17832)

076 825 7716 (ஆகாஸ்)



## International Engineering Services (PVT) Limited

**Vacancy - Draughtsman**

- **Qualification-** Diploma in Construction Technology (Nvq Level 5) or அதற்கு மேலான கல்வித் தகைமை.
- **Training allowances-** Rs.20,000 பயிற்சிக் காலத்தின் பின்னர் தகுதி அடிப்படையில் நிரந்தர ஊழியர் தெரிவு செய்யப்படுவார்.
- தொடர்புக்கு,

**info@ieslengineers.com**
எனும் Email address இற்கு உங்களின் சுய விபரத்தை அனுப்பவும்.

**T.P : 021 223 0916**

(17866)



## கணினி தட்டெழுத்தாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு கணினி தட்டெழுத்தாளர் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

**076 573 4507** (17877)



## தவறிவிட்டது

கெங்காதரன் வாசுகி என்பவரின் சாரதி அனுமதிப்பத்திரமும் MG 4828 இலக்கம் கொண்ட மோட்டார் சைக்கிளுக்குரிய ஆவணங்களும் தவறி விட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து 077 616 4181 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (17831)



" INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"

## TECHNO WORLD

A/L தொழில்நுட்பப் பிரிவு

A/L 2023 பரீட்சைக்கு தோற்ற இருக்கும் அனைத்து மாணவர்களுக்குரிய

### விசேட செயலமர்வு

| | |
|---|---|
| 01,02,03 December 2023 | தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 04,05,06 December 2023 | பொறியியல் தொழினுட்பவியல் உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் |
| 07,08,09 December 2023 | ICT, விவசாய விஞ்ஞானம் புவியியல், கணிதம் |

'காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை'

(17853)

இடம் : வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்

**077 017 5346**


## சர்வதேச...

முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 10 நாடுகளுக்கான இலங்கைத் தூதுவர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இதன் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வர்த்தகம் மற்றும் முதலீட்டை அதிகரிப்பதில் எங்கள் கவனம் உள்ளது. அரசாங்கங்கள், முன்னணி வர்த்தக நிறுவனங்கள், முன்னணி முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் துறைகளுடன் நீங்கள் தொடர்ந்து தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும்.

இலங்கையை சுற்றுலாத் தலமாக மட்டுமன்றி பிரதானமாக முதலீடு மற்றும் வர்த்தகத்திற்கான ஒரு கவர்ச்சிகரமான இடமாக ஊக்குவிக்க வேண்டும். ஏனைய நாடுகளுடன் நெருக்கமாக செயற்படுவதன் மூலம் இலங்கை தனது பொருளாதாரத்தை வேகமாக அபிவிருத்தி செய்ய முடியும்.

இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும் வகையில் புதிய வலையமைப்பை உருவாக்குவதற்கு அந்நாடுகளிலுள்ள இலங்கையர்களின் அமைப்புகள் மற்றும் அந்த நாடுகளில் உள்ள இலங்கையின் முக்கிய நண்பர்களுடனும் இணைந்து செயற்படுமாறு புதிய தூதுவர்களுக்கு பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

(ம-7)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 17.10.2023 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் சந்திரசேகரம் சிறிரஞ்சன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று 14.11.2023 செவ்வாய்க்கிழமை அன்று காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்றது. 16.11.2023 நாளை வியாழக்கிழமை நினைவஞ்சலியும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் **வண்ணை காமாட்சி அம்மன் தேஸ்தான திருமண மண்டபத்தில்** நண்பகல் 11.30 மணியளவில் நடைபெறும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இல.596/4,
கே.கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (17870)

தகவல்:
குடும்பத்தினர்


## VILLAGE HOTEL
பஸ் சேவை
**JAFFNA EXPRESS**
AIRPORT PICK UP DROP SERVICE
வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/= (17484)
T.P:077 544 8503



## IELTS - New Batch ஆரம்பம்
இத்துடன் Basic & Advance Grammar Classes.
இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (17871)



## CANADA VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7635)
0777-068-777
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS



## VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
- ✔ ONLINE APPLICATIONS
- ✔ VISA APPOINTMENTS
- ✔ PASSPORT APPLICATION
- ✔ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-7635)
STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport
இலங்கை விசா நீடித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777



## விற்பனை பிரதிநிதிகள் தேவை

**யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் விற்பனை நிறுவனத்திற்கு முழு நேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ தொழில் செய்யக் கூடியவர்கள் விண்ணப்பிக்கலாம்.**

- தொழில் முன் அனுபவம் இருப்பின் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
- மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் அவசியம்
- சிறந்த தொடர்பாடல் திறனைக் கொண்டிருத்தல் அவசியம்

**கொடுப்பனவுகள் மற்றும் மேலதிகக் கொடுப்பனவுகள் யாவும் கல்வி மற்றும் தொழில் தகைமையை அடிப்படையாககொண்டு தீர்மானிக்கப்படும்**

(17859)

**076 072 1245, 021 223 2721**


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org